செ.வெ.எண்: 652 நாள்: 01.10.2019

**புதுக்கோட்டை மாவட்ட நறிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் நறிக்குறவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை பெற்று பயன்பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட நறிக்குறவர் நலவாரிய உறுப்பினர்கள் நறிக்குறவர் நல வாரியத்தின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை பெற்று பயன்பெறலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நரிக்குறவர் இன மக்களுக்கு நரிக்குறவர் நலவாரியத்தின் மூலம், பதிவு பெற்ற நலவாரிய அட்டைகள் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம் ரூ7,500, குழுவாகத் தொழில் தொடங்க மானியம் தனிநபருக்கு ரூ.10,000 அல்லது குழுவிற்கு அதிகபட்சமாக ரூ.1,25,000 வழங்கப்படுகிறது. எனவே நரிக்குறவர் நல வாரிய பதிவு பெற்ற உறுப்பினர்கள் அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழான தங்களது, கோரிக்கை குறித்து புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இதுவரை நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய விடுபட்ட நரிக்குறவர் இனமக்கள், புதுக்கோட்டை மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடம் உடனடியாக தங்களை பதிவு செய்து பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**